## 9

# "சிறு கரங்களே, நீங்கள் செய்வதைக் குறித்து கவனமாயிருங்கள்!"

## (எபேசியர் 5:15-21)

குழந்தைகள் வேத வகுப்பில் போதிக்கப்பட்ட ஒரு பாடல் தனிப்பட்ட செல்வாக்கின் முக்கியத்துவத்தைக் குறித்து பேசுகிறது. இந்த பாடல் இளம் மனதுடைய இளந்தளிர் எண்ணங்களில் நாம் என்ன செய்கிறோம், சொல்லுகிறோம், பார்க்கிறோம் என்பதன் விளைவுகள் என்ன என்பதைப் பதியப் பண்ணும் பாடல். சிறு குழந்தை தனது தனிப்பட்ட செல்வாக்கு எவ்வளவு இன்றியமையாதது என்று பயிற்றுவிக்கப் படவும் விழிப்புணர்வு பெறும்படியும் கூறுகிறது. கீழ்வரும் பாடல் வரிகள் அவற்றில் சில:

> ஓ, சிறிய கண்களே, நீங்கள் பார்ப்பது என்ன என்பதில் கவனமாயிரு ...
> ஓ, சிறிய காதுகளே, நீங்கள் கேட்பது என்ன என்பதில் கவனமாயிரு ...
> ஓ, சிறிய நாவுகளே, நீங்கள் சொல்லுவது என்ன என்பதில் கவனமாயிரு ...
> ஓ, சிறிய கரங்களே, நீங்கள் செய்வது என்ன என்பதில் கவனமாயிரு ...
> ஓ, சிறிய பாதங்களே, நீங்கள் எங்கே போகிறீர்கள் என்பதில் கவனமாயிரு ...

இந்தப் பாடலின் ஒவ்வொரு வரியின் முடிவிலும், "அப்பா மேலிருந்து அன்பாய் பார்க்கிறார், ஆதலால் கவனமாயிரு ..." என்று சொல்லப் படுகிறது. பாடலின் முடிவில் சிலர் மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு அவயவத்தை ஒன்றாக சேர்த்து பாடுவார்கள்: "ஓ, சிறியக் கண்களே, காதுகளே, நாவே, கரங்களே, பாதங்களே, அப்பா மேலிருந்து தப்பாமல் அன்புடன் பார்க்கிறார், எச்சரிக்கையாயிரு ... !"

கிறிஸ்தவனாக மாறியதால், நீங்கள் உங்கள் சமுதாயத்தின் மத்தியில் ஒரு வித்தியாசப் பட்ட வாழ்க்கை முறையை வாழும்படி தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒரு "பரிசுத்தவான்" (காண்க 5:3). அதாவது நீங்கள் தேவ பக்தியற்றவர்களுடன் நட்புறவு கொள்வதோ அவர்களுடைய நடத்தைகளில் உங்களை உட்படுத்திக் கொள்ளவோ கூடாது. கிறிஸ்தவர்கள் தவறானவைகளோடு ஒத்துப்போகக் கூடாது என்று சொல்லும் போது, அவன் கவலையுண்டாக்கும் வாழ்க்கையையோ நம்பிக்கையற்ற முக நாடியுடனோ வாழ வேண்டியவன் என்று பொருளல்ல. எபேசியர் 5:15-21ல் பவுலின் வார்த்தைகள் கிறிஸ்தவன், சில நடத்தைகளிலிருந்து விலகியிருக்கும்படி கூறப்பட்டாலும்,

*மேன்மையான காரியங்களை மற்றெல்லாரையும் விட பெரிதான அளவில் அனுபவிக்க முடியும் என்று சுட்டிக் காட்டுகின்றன. கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதே ஒரு வீரதீர செயல்தான்!*

*கிறிஸ்தவனின் நல்ல செல்வாக்கு உலகத்திலிருப்பவர்களின் செல்வாக்கைக் காட்டிலும் வித்தியாசப் பட்டது. 5:15-21ல் இந்த வித்தியாசங்களைத் தான் பேசுகிறது. சிறு குழந்தைகளுக்கு போதித்தபடி அவன் என்னத்தைப் பார்க்கிறான், பேசுகிறான், எங்கே போகிறான், எப்படி செயல் படுகிறான், போன்ற காரியங்கள் கிறிஸ்தவனும் தனது செல்வாக்கை தவறானவைகளோடு ஒத்துப் போய்விடாமல் காத்துக் கொள்ள அறிவுறுத்துகிறது.*

## *"நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதில் கவனமாயிருங்கள்" (5:15)*

*உங்கள் செல்வாக்கைக் காப்பாற்றிக் கொள்வதில் நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய முதல் படி, நீங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு படியிலும் "கவனமாயிருக்க" பார்க்க வேண்டும். "கவனமாயிரு" எனும் வார்த்தை கிரேக்க மொழியில் இம்மியளவும் பிசகாத, சரியாக "நடப்பது" என்று குறிப்பிட்டு "கவனமாக" நடக்க வேண்டியதை சுட்டிக் காட்டுகிறது. "ஞானமில்லாதவர்கள்" சிந்தித்துப் பாராமல் நடந்து கொள்வதை தெரிந்து கொள்கிறார்கள். அவர்கள் இடம் விட்டு இடம்போய். தங்கள் செயல்களினால் தங்களிலுள்ள நல்ல செல்வாக்கின் திறமையை கெடுத்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய நல்ல பெயரை கெடுத்துக் கொண்டபின் அவர்கள், "அப்படி நடக்கும் என்று* <u>*நினைத்துப்*</u> *பார்த்ததில்லை" என்பார்கள். கிறிஸ்தவன் தன் பெயரைக் கெடுக்கக் கூடிய இடங்களுக்குச் செல்லவோ, நடவடிக்கைகளில் ஈடுபடவோ கூடாது. ஒரு தகப்பன் தன் மகன் கிறிஸ்தவனுக்கு ஆகாத ஒரு காரியத்தைச் செய்யக் காண்கிறான். தகப்பன், "மகனே! அதைச் செய்யும் போது என்ன நினைத்துக் கொண்டிருந்தாய்?" என்று கேட்கிறார். வெளிப்படையாகச் சொன்னால், மகன் எதையும் நினைத்துக் கொண்டிருக்கவில்லை; அவன் "ஞானமற்றவனாய்" நடந்து கொண்டிருந்தான்.*

*கிறிஸ்தவன் தேவனுடைய வசனத்தினாலே பிரகாசிப்பிக்கப் பட்டவன். ஆதலால் சரியான தெரிவை செய்ய அவனுக்கு ஞானமிருக்கிறது. நீங்கள் ஒரு கூட்ட நண்பர்களோடு சேர்ந்து கிறிஸ்தவனுக்கு ஏற்காத ஒரு காரியத்தைச் செய்ய அழைக்கப்பட்டால், தேவனுடைய ஞானத்தின் வெளிச்சம் உங்களில் இருக்கிறபடியால் நீங்கள் அங்கே போவதை அது தவிர்க்கச் செய்யும். வசனத்தினால் வரும் ஞானத்தைக் கொண்டு உங்களின் செல்வாக்கு பிரகாசிக்கச் செய்யுமா அல்லது கறைபடுத்துமா என்று தீர்மானித்து நண்பர்களையும் செயல்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும் (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:21, 22). திருமறையின் உபதேசத்தை பயன்படுத்தி உங்கள் வாழ்க்கையின் தெரிவுகளைச் செய்வீர்களானால், உங்கள் செல்வாக்கை காத்துக்கொண்டு "பரிசுத்தமாய்" இருப்பீர்கள் (1 தெசலோனிக்கேயர் 5:23). வாழ்க்கையில் உங்கள் தெரிவுகளை வழிநடத்த, திருமறையின் பண்புகளைப் பயன்படுத்துவீர்களானால், உங்கள் செல்வாக்கு பரிசுத்தமாய் நிலைத்திருக்கும் என்று எளிதாக அர்த்தப்படுகிறது. திருமறையைப் பின்பற்றி, ஒரு பரிசுத்தவான் நடந்துகொள்கிறவிதமாய் நடந்து கொள்வீர்கள்.*

*நீங்கள் இப்பொழுது ஒரு கிறிஸ்தவனானபடியால், ஞானத்தின் அறிவைப் பெற்று நீங்கள் என்ன செய்கிறீர்கள், எப்படி வாழ்கிறீர்கள், உங்கள் பேச்சு எப்படிப்பட்டதாயிருக்கிறது, உங்கள் நட்புக்குரியவர்கள் யார் என்றெல்லாம் முறையாய் தெரிவு செய்வீர்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் ஞானமாய் நடந்து கொள்வதில் நீங்கள் அக்கறையாய் இருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கை திருமறையின் உபதேசக் கோட்பாடுகளால் கட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் (கலாத்தியர் 5:16; எபேசியர் 4:1; 1 யோவான் 1:7).*

## *"காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" (5:16)*

*5:15ல் சொல்லப் படும் ஞானமுள்ளவர்களைப் போல, கவனமாய் நடப்பது இயலாத காரியமாக தெரியலாம். ஒரு கிறிஸ்தவன் அப்படி ஒரு வாழ்க்கையை வாழும்படி எப்படி எதிர்பார்க்க முடியும்? சிலர் தங்களுக்கு முன்பாக இருக்கிற (வாழ் நாள்) காலத்தின் அநேக வருடங்களை நினைத்துப் பார்த்து, மனந்தளர்ந்து நம்பிக்கையிழந்தவர்களாய், "அத்தனை ஆண்டுகள் கவனமாய் நடந்து கொண்டு வாழ்வது கூடாத காரியம். நான்* ஒருபோதும் *இதைச் செய்ய முடியாது!" என்கின்றனர். அநேகர் ஞானவான்களாய் நடந்து கொள்ள கொடுக்கப்பட்ட கட்டளையினால் வாழ்வதற்கான அனைத்துப் பிரயாசங்களையும் கைவிட்டு விடுவார்கள்.*

*பரிசுத்தவானாய் வாழும் முறையில் உள்ள கஷ்டங்களை வசனம் 16 பேசுகிறது. இது மிகவும் நடைமுறை வசனம்; ஞானமுள்ள தெரிவுகளால் வாழ்வதென்பது கையாளக் கூடிய கருத்தாக அதை ஆக்குகிறது. பவுல், பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்வை வாழ, கணத்தில் காண வேண்டும், ஆண்டுகளில் அல்ல என்றார், கிறிஸ்தவன் ஒளியின் பிள்ளையாய் நடக்க வேண்டுமென்றும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் தீர்மானம் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறான். நீங்கள் உங்கள் வாழ்க்கையை மொத்தமாகப் பார்த்து, "நம்பிக்கையற்றதாய் இருக்கிறது" என்று கூறக்கூடும்! அதற்குப் பதிலாக, குறுகிய கணங்களைக் காணவேண்டும் என்று பவுல் கூறினார். இருபது அல்லது முப்பது வருடங்களுக்கும் மேலாக சாத்தியமானது என்று காணக்கூடாதவைகள், இந்தக் கணத்தில் சாத்தியமானது என்று காணக்கூடும். இப்போது நீங்கள் எதிர்கொள்ளும் எதையும், ஞானமுள்ள ஒளியின் பிள்ளையாய் நடப்பதின் மூலம் எதிர்கொள்ளுங்கள்.*

*உங்கள் தருணங்கள் முழுவதையும் பயன்படுத்தி ஞானத்தோடு வாழ்ந்தால், அப்போது நீங்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழமுடியும். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் வெளிச்சத்தின் பாதையிலே பின்பற்ற நீங்கள் பயன்படுத்த வேண்டும்.*

*"காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்வது" ("காலத்தின் பெரும்பகுதியை பயன்படுத்திக் கொள்ள செய்வது"; KJV) என்பது ஆர்வமிக்க ஒரு வார்த்தைக் காட்சி. இந்த சொற்றொடர் மற்றவர்களுக்கு சொந்தமான ஏதோ ஒன்றை கிரயம் கொடுத்து வாங்குவது என்று பொருள் படுகிறது. சந்தை வெளிகளில், வித்தியாசப்பட்ட கடைக்காரர்களிடமிருந்து பொருட்களை வாங்குகிறீர்கள் (அல்லது மீட்டுக் கொள்கிறீர்கள்). உங்களின் இந்தக் காலத்தை (நேரத்தை)*

உருவகப் படுத்தி பவுல் பேசுகிறார். பூமியில் வாழுங்காலத்தில், உங்கள் வாழ்வின் மணித்துளிகள் "பொல்லாங்கன்" கையில் இருக்கிறது. நீங்கள் அந்த மணித்துளிகளை மீட்டு ஞானமாய் பிரயோஜனப் படுத்த வேண்டிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. உங்கள் காலத்தை நீங்கள் எப்படி பயன்படுத்துவீர்கள்? கிறிஸ்தவனாகிய நீங்கள், உங்கள் வாழ்வின் மணித்துளிகளை உங்களுக்காக அல் லாமல் தேவனுக்கென்று பயன்படுத்த வேண்டும் (கலாத்தியர் 2:20). ஒவ்வொரு நாளின் மணித்துளிகளையும் வெளிச்சத்தைப் பின்பற்றுவதில் நேரத்தைக் கழிப்பீர்களானால் உங்கள் நற்பெயர் காப்பாற்றப்படும்.

## "தேவனுடைய சித்தத்தை புரிந்து கொள்ளுங்கள்" (5:17)

மீண்டும் வசனம் 17ல், கிறிஸ்தவன் கொண்டிருக்கும் அறிவு வலியுறுத்தப்படுவதைக் காண்கிறோம். "மதியற்றவர்களைப் போல்" எனும் பதம், இங்கே மந்தமாக சிந்திக்கக் கூடியவர்களைக் குறித்து பேசப்படுகிறது. இப்படிப்பட்ட நபர் சூழ்நிலைக்கேற்ப பகுத்துப் பார்க்கும் திறன் பெற்று சரியான தெரிவைத் தெரிந்துகொள்ள இயலாதிருக்கிறார். கிறிஸ்தவன் மதியற்றவனல்ல ஏனெனில் அவன் தேவனுடைய வசனத்தை "புரிந்துகொள்ள முடியும்."

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே கர்த்தருடைய முதன்மையான தெரிவாக இருந்தது (லூக்கா 2:49). இதுவே கிறிஸ்தவனின் முதன்மைத் தெரிவாக இருக்க வேண்டும். கர்த்தருடைய சித்தத்தை அறிந்து நீங்கள் அவருடைய சித்தத்தை செயல்படுத்த வேண்டும். "அறிந்து கொள்ளுதல்" எனும் பதம் "கேட்டு உணருதல், பற்றிக்கொள்ளுதல், அல்லது மனதால் பார்த்தல் என்றெல்லாம் பொருள் படும்." அது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டதும் நடைமுறை அறிவு எப்படி கிரியை செய்கிறது என்பதும் பற்றிய உண்மை. நீங்கள் ஏற்கனவே, உங்கள் வாழ்விற்கான தேவனுடைய சித்தத்தில் சிலவற்றை அறிந்துள்ளீர்கள். இப்பொழுது தேவனுடைய கட்டளைகள் எப்படி உங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்துகிறது என்று அறிய நீங்கள் படிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. திருமறை உபதேசம் இன்னதென்ற உண்மை அநேகருக்கு தெரியும், ஆகிலும் ஒரு சிலரே அந்த உண்மைகளை தங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்தும்படி கற்று உணர தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

புதிய கிறிஸ்தவராகிய நீங்கள், சுவிசேஷ உண்மைகளைப் பற்றி அறிவீர்கள். இந்த உண்மைகளை நீங்கள் அறிந்ததினால்தான், பாவமன்னிப்பிற்கென்று முழுக்குதல் பெற்று இப்படியாக தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிய வற்புறுத்தப்பட்டு பாவங்கள் போக கழுவப்பட்டீர்கள். வாழ்வில் நல்ல தெரிவுகளை தேர்ந்தெடுக்க தேவனுடைய வசனங்களை தொடர்ந்து வாசித்து, கற்று, புரிந்து கொள்ளுங்கள்!

## "ஆவியினால் நிறைந்திருங்கள்" (5:18-21)

உங்கள் செல்வாக்கைக் காத்துக் கொள்ள கடைசி படி கிறிஸ்தவனுக்கும் உலகத்தாருக்குமிடையே இருக்கிற பெரிய வித்தியாசத்தை உணர வேண்டும். இந்த இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகளை ஒருமுறை நீங்கள் அறிந்து கொள்வீர்களானால், உலகத்தாரின் செல்வாக்குக்குட்படுவதை நீங்கள் தவிர்ப்பீர்கள்.

இந்தப் பகுதி வசனங்கள் கிறிஸ்தவன் தேவனுடைய ஆவியினால் நிறைந்திருப்பதையும், உலகத்தார் விஷமிக்க ஓயின் போன்ற மதுபானத்தால் நிறைந்திருப்பதையும் முன் வைக்கிறது. இதைக்காட்டிலும் பெரிய வேறுபாடு இருக்க முடியாது. ஒருவர் மாம்சப் பிரகாரமான மனநிறைவு கொடுக்கும் பொருளால் கவர்ச்சிக்கப்படுகிறார், ஆனால் மற்றொருவர் ஆவிக்குரிய சந்தோஷம் கிடைக்கும் பொருளில் கவனம் செலுத்துகிறார். கிறிஸ்தவரல்லாதவர் உலகத்தின் பொய்யான சந்தோஷத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறார், கிறிஸ்தவரோ சந்தோஷத்தால் நிறைந்து பாடல்களைப் பாடுகிறார். உலகப் பிரகாரமானவர் தான் (எல்லாவற்றையும் விரயமாக்கினதை) எல்லாவற்றையும் தனக்கே கெடுதிகளை உண்டு பண்ணிக் கொள்கிற காரியங்களை செய்வதை உணருகிறார், ஏனெனில் தனக்கென்று ஒரு கட்டுப்பாட்டை அவர் கொண்டிருப்பதில்லை, தேவபக்தியுள்ள ஒருவர் பொக்கிஷமாக சேர்த்து வைக்கப்பட்ட பிரதிபலன்களை தனது சுயக்கட்டுப்பாட்டினால் கண்டுபிடிக்கிறார்.

உலகத்தின் வழியினால் துன்பியல் வெறுமையே விளைகிறது, மற்றும் கிறிஸ்தவனோ தன் இருதயத்தை மேன்மையான வழியில் நிறைத்திருக்கிறான். அவன் உண்மையான ஞானத்தைப் பின்பற்றி தேவனுடைய கற்பனைகளால் தன்னை உருவாக்கிக் கொள்கிறான். ஸ்தோத்திரம் செலுத்துவதிலும் மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்வதிலும் தனது வாழ்க்கை நிறைந்திருக்கும்படி வாழ அவன் தீர்மானித்திருக்கிறான். கிறிஸ்தவன் தன் அகந்தையான மேட்டிமைகளை களைந்து போட தீர்மானித்து, மனநிறைவைத் தரும் ஊழியத்தால் வரும் பலனை அனுபவிக்க பிரியமுள்ளவராயிருக்கிறார்.

இப்படிப்பட்ட தெரிவுகளில், கிறிஸ்தவன் தன்னை சிலுவையிலே அறைந்து விட்டு கர்த்தருடைய முன்மாதிரியை பின்பற்ற தீர்மானிக்கிறான். ஒவ்வொரு நாளும் தன் இருதயம் சந்தோஷத்தால் நிரப்பப்படுவதற்கான அதிகமதிகமான ஆசீர்வாதங்களை கிறிஸ்தவன் கண்டுபிடிக்கிறான். அப்படிப்பட்ட சந்தோஷத்தால் வரும்விளைவு ஆழமான அக்கரையும் அன்பும் அடுத்தவர்கள் மீது ஏற்படும். தேவனுடைய சந்தோஷத்தை பகிர்ந்துகொள்ள விரும்புகிறவர் வாழ்க்கையின் தெரிவுகளை நன்கு கற்று தனது தெரிவு மற்ற கிறிஸ்தவனை அழித்து விடாதபடி நடந்து கொள்கிறார்.

## நிறைவுறும் சிந்தனைகள்

உங்களைச் சுற்றிலுமுள்ள ஜனங்கள்மேல் வல்லமையான செல்வாக்கு உங்களுக்கு உள்ளது. உங்கள் தெரிவுகளும் கருத்துக்களும் திடீரென்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. உங்களாலும், நீங்கள் கிறிஸ்தவராக மாறிவிட்டீர்கள் என அறிந்தவர்களாலும் உங்கள் பேச்சு, உடை, மற்றும் பொழுதுபோக்குக் காரியங்கள் முற்றிலும் வித்தியாசப்பட்டிருப்பது உற்று கவனிக்கப்படுகிறது.

உலகப் பிரகாரமான அலுவலகத்தில் ஒரு வாலிபப் பெண் பணியாற்றிக் கொண்டிந்த சம்பவத்தை ஒரு நாள் வாசித்தேன். இப்படிப்பட்ட அலுவலகத்தில் சாபமிடுதல், தேவதூஷணம், மற்றும் எல்லா வித ஒழுக்கமற்ற காரியங்களையும் பேசுவது புதிதல்ல. இந்த வாலிபப்பெண் கிறிஸ்தவளாக மாறினாள், அவள் தன் அலுவலகத்துக்கு திரும்பிப் போவதைக் குறித்த அச்சத்தால் நிறைந்திருந்தாள்.

*தனது உடன் அலுவலர்கள் தன்னுடைய மனமாற்றம் குறித்து என்ன பேசுவார்கள் என்பது குறித்து ஆழ்ந்து சிந்தித்தாள். தனது மனதின் பயத்தை, தனது தாயாரிடம் சொல்லி வைத்தாள். அடுத்து வந்த திங்கட்கிழமை, அந்த வாலிபப் பெண் வேலைக்குப் போனாள். அந்நாள் பணி முடிந்து வீட்டிற்குத் திரும்பினாள். அவளுடைய தாயார், "அலுவலகத்தில் இந்த நாள் உனக்கு எப்படியிருந்தது?" என்று கேட்டார். அந்த வாலிபப் பெண், "எல்லாமே நல்லதாகப் போயிற்று, நான் கிறிஸ்தவன் என்று யாருமே கண்டுபிடிக்கவில்லை!" என்று சொன்னாள். இது உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கிற கிறிஸ்தவனின் மனோபாவமாக இருக்க முடியாது. உப்பும் வெளிச்சமும் சுற்றுப்புற சூழலில் கவனிக்கப்படாதிருந்தால், அது பயனற்றதாகி விடும் (மத்தேயு 5:13-16).*

*கிறிஸ்தவனாக, உங்களைச் சுற்றிலுமுள்ள உலகத்தில் உங்கள் செல்வாக்கை நிலைநாட்ட பிரயாசப்படவேண்டும். நீங்கள் இருக்கும் இடத்தில் இருக்கும் மற்றவர்கள் கிருபையுள்ள தேவன் ஒருவர் பரலோகத்தில் இருக்கிறார் என்பதையும் நீங்கள் அவருடைய பிள்ளை என்று உணர்வடையச் செய்யவும் வேண்டும். ஒவ்வொரு மணித் துளியிலும் நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்று தெரிவு செய்துகொள்ளும் விஷயத்தில் எவ்வளவு கவனமாயிருக்கிறீர்கள்?*

*நீங்கள் கிறிஸ்துவுக்கென்று வாழத் தீர்மானித்துள்ளபடியால், நீங்கள் கவனமாக உங்கள் கண்களையும், காதுகளையும், நாவையும், கரங்களையும் உங்கள் பாதங்களையும் கவனித்துப் பார்க்க வேண்டும். மேலே இருக்கிற அப்பா அன்புடன் பார்த்துக் கொண்டுள்ளார், அவருடைய "வெளிச்சத்தின் பிள்ளைகளில்" ஒருவராக நீங்கள் "நடந்து" கொள்ளும்படி அவர் எதிர்பார்க்கிறார்.*